**இலங்கை துறைமுக அதிகாரசபை "அதிகாரசபை" மற்றும் மற்றும் அதன் துணைக் கம்பனிகள் "குழுமம்"- 2019**

---

## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் ''அதிகாரசபை'' மற்றும் அதிகாரசபையின் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் ''குழுமம்'' ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்களின் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள், சாராம்சப் படுத்தியுள்ள முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளைக் கொண்டமைந்துள்ள 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகாரசபையின் நிதிக் கூற்றுகள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்க வில்லை. அபிப்பிராயம் மறுதலிப்பதற்கான அடிப்படை பகுதிகளில் கலந்துரையாடியுள்ள விடயங்களில் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக் கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் பொருட்டு போதியளவிலும் பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளையும் பெற்றுக்கொள்வறத்கு எனக்கு இயலவில்லை.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுகள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய தரப்புகளதும் பொறுப்புகள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆவதுடன், முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தைஅதிகார சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் மற்றும்

அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் தன்மைக்கு ஏற்புடையதான விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடாத்தப்படும் கணக்காய்வின் அடிப்படையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடல் எனது பொறுப்பாகும். எவ்வாறெனினும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான அபிப்பிராயமொன்றிற்கான அடிப்படையொன்றினை வழங்க போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியொழுகாமை

| | உரிய நியமத்தின் தொடர்புகளுடன் இணங்கியொழுகாமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இல் 51 ஆவது பந்திபடி நிலையான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் சிதைவுப் பொருட்களின் பெறுமதி வருடாந்தம் மீளாய்வு செய்து மாற்றங்கள் ஏற்படுமாயின் அந்த மாற்றத்தினை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 பிராகரம் கணக்குகளில் சீராக்குதல் வேண்டுமாயினும், அதிகார சபைக்குரிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திருயோணமலை மற்றும் காலி துறைமுகங்களில் காணப்பட்ட ரூபா 15,530 மில்லியன் கொண்டுசெல்லும் பெறுமதியுடைய 10 தொகுதிகளுக்குரிய சொத்துக்கள் தொடர்பாக மீளாய்விற்கு உட்படுத்தியிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமம் பிரகாரம் சம்பந்தப்பட்ட 05 சொத்துக்களின் உருப்படிகள் பொருட்டு மீளாய்வு மேற்கொண்டுள்ளதுடன், இவ்வாறு மீளாய்வு செய்யும் நடைமுறை, நியமனம் செய்த குழுமூலம் தொடர்ச்சியாக பேணிச் செல்லப்படுமென நிதிக் கூற்றுகளுக்கான குறிப்பு இலக்கம் 53 மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | சொத்துக்கள் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 21 இன் 23 (அ) பிரிவின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அதிகாரச்சபைக்கு சொந்தமான ஐ.அ.டொலர் 181.62 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்பினை நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்காக இலங்கை ரூபாவிற்கு மாற்றும் போது, மாற்றம் செய்யப்பட்ட திகதியில் உள்ளபடியான ரூபாவின் பெறுமதியை அடிப்படையாக கொள்ளாமையால் நிலையான வைப்புக்களின் பெறுமதி மற்றும் அந்நிய செலாவணி இலாபமானது ரூபா 213.56 மில்லியனால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | இணங்குகின்றேன்.<br><br>நாளாந்தம் இடம்பெறும் டொலர் வைப்புகளுக்காக அத்திகதிகளில் உள்ள டொலர் பெறுமதியின பிரகாரம் மாதாந்தம் பேரேட்டுக் கணக்குகளில் பதிவு செய்தல் இதுவரை இடம்பெற்றுள்ளது.<br><br>2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபயொன குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் கணிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | அந்நிய செலாவணி மாற்றல் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 21 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பொருண்மையான உருப்படிகளும் வெவ்வேறாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையினால் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கிற்காக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நட்டஈடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 6,809.40 மில்லியன் நானாவித செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அது மொத்த நிர்வாகச் செலவினத்தில் சுமார் 45 சதவீதமாக காணப்பட்டது. | இணங்குகின்றேன்.<br><br>அதிகாரசபையினால் இடம்பெறும் வழக்குகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூபா 6,879,791,203 நானாவித செலவினங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், குறிப்பொன்றின் மூலம் வேறாக காண்பிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் போது விரிவான குறிப்பொன்றின் மூலம் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பொருண்மையான உருப்படிகளும் வெவ்வேறாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டு நவம்பர் தொடக்கம் தொழில்பாட்டு நடவடிக்கைகளை நிறுத்தப்பட்டிருந்த அதிகார | வழக்கொன்று தொடரப்பட்டால் மாத்திரமே நிகழத்தக்க பொறுப்புக்கான ஒதுக்கம் | அதிகாரசபைக்கு முழு உரித்துடைய துணைக் கம்பனிக்குரியதாக |

| | | |
|---|---|---|
| சபையினால் நிருவகிக்கப்படும் கம்பனியான மாகம்புரய துறைமுகம் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பெனியால் 2014 ஆம் ஆண்டில் தனியார் வங்கியொன்றில் பெற்றுக்கொண்டிருந்த அ.டொலர் 24 மில்லியன் கடன் தொகையில் ஐ.அ.டொலர் 22.3 மில்லியன் தொகை தீர்க்கப்படாதிருந்ததுடன், இந்த அறிக்கையின் திகதியளவில் கடனைத் தீர்ப்பதற்கு கம்பனியிடம் போதுமான பணம் காணப்படவில்லை. மேலும் கடன் தொகைக்காக பிணையாளராக மற்றும் தாய்க் கம்பனி எனும் வகையில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராக நிலுவைக் கடன் மீதியான ஐ.அ.டொலர் 22.3 மில்லியனை அறவிடுவதற்கு வழக்கு தொடருவதாக சம்பந்தப்பட்ட வங்கியால் அழைப்பாணையொன்று 2019 ஏப்ரல் 02 ஆந் திகதி அதிகார சபையிடம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், அதிகார சபையால் இதற்காக நிகழத்தக்க பொறுப்புகளாக ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. | மேற்கொள்ளப்படும். குறித்த நிதியாண்டினுள் வழக்கு தொடரப்பட்டிராமையால் நிகழத்தக்க பொறுப்புக்கான ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவில்லை. அதனால் எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் தொகையை செலுத்த போதியளவான பணம் இல்லாமையால் மற்றும் அதிகாரசபை குறித்த கடன் தொகைக்காக பிணையாளராக செயற்படுகின்றமையால் ஏற்படக்கூடிய நிதி ரீதியான ஆபத்தினை புறக்கணிக்க முடியாது. அதற்காக இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஒதுக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஏப்ரல் 01 ஆந் திகதிய 2064/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் பெயரளவு வரி (Notional tax) பெறுமதி 2018/2019 மதிப்பீட்டு ஆண்டு முதல் தொடர்ச்சியாக | இணங்குகின்றேன்.<br><br>2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்கு அறிக்கைகளில் குறிப்பிடப்படாத பெயரளவு வரிப் | உரிய அனைத்து பெற வேண்டிய மீதிகளையும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூன்று வருட காலப்பகுதியினுள் கழிக்க முடியும். எவ்வாறெனினும், 2018/2019 மதிப்பீட்டு ஆண்டிற்கான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முன்கொண்டு செல்லப்பட்ட ரூபா 70.68 மில்லியனான பெயரளவு வரிப் பெறுமதி 2019 ஆம் ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பெற வேண்டிய பெயரளவு வரிக் கணக்கு மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் ஆகியவை மேற்படி பெறுமதியினால் குறைக் கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | (Notional tax) பெறுமதியான ரூபா 70,687,073 ஆன தொகை 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு அறிக்கைகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான வரிக்குரிய வருமானத்தினை கணிப்பீடு செய்யும் போது ஒதுக்கம் செய்யப்பட்ட கழிவுப் பெறுமதியின் அளவு (Volume Rebate) மற்றும் செலுத்தப்பட்ட நிதியேற்பாட்டின் பெறுமதி, வருமான வரிக் கணிப்பீட்டு பதிவேடுகளின் பிரகாரம் மாற்றமடைந்தமையால் வரி அறவிடக்கூடிய வருமானம் ரூபா 1,789.06 மில்லியன் வரை குறைவடைந்திருந்ததுடன், அதன் காரணமாக வருமான வரி மற்றும் செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா 500.94 மில்லியனால் குறைக் கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன்.<br><br>சரியான ஒதுக்கப் பெறுமதி இறுதி வரி அறிக்கையில் சீராக்கம் செய்யப்பட்டு வருமான வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமான வரி அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம், வருமான வரிக் கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அதிகாரசபையினால் சேவை வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கணக்கு வைக்கப்படாத வருமானம் ரூபா 16.76 மில்லியனாக காணப்பட்டது. அதன் காரணமாக | இணங்குகின்றேன்.<br><br>2019.12.31 ஆந் திகதியளவில் உள்ளபடியான இந்த பட்டியல் கப்பல் முகவருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், பெற வேண்டியவை (AR) | மீளாய்வாண்டின் மொத்த வருமானத்தினை இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரசபையின் கடன்பட்டோர் மீதி மற்றும் வருமானம் அந்த அளவினால் குறைக்கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | மற்றும் பொதுப் பேரேடு (GL) ஆகிய 02 கட்டமைப்புகளிடையே மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களின் போது ஏற்படும் வேறுபாடு காரணமாக 2020 ஆம் ஆண்டிற்குரிய வருமானமொன்றாக 2021 ஆம் ஆண்டினுள் கணக்கு வைக்கப்பட்டுள்ளது<br><br>இந்த 02 கட்டமைப்புகளிடையே இடம்பெறும் சீராக்கங்களிலான வேறுபாட்டினை நீக்குவதற்கு DMS நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | காலித் துறைமுகத்தின் நவீனமயப்படுத்தல் பணிகளுக்காக அதிகாரசபையினால் 2018 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 7.61 மில்லியன் பணமானது இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் உசாத்துணை கம்பனியிடமிருந்து பெற வேண்டிய பணமாக அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய பணமாக காண்பிக்கப்பட்டிராமையால், மேற்படி தொகையினை செலுத் முடியாதென குறித்த கம்பனி அதிகாரசபைக்கு எழுத்துமூலம் தெரிவித்திருந்தது. இதன் காரணமாக மேற்படி தொகையினை பெற்றுக்கொள்ளல் நிச்சயமற்றததாக காணப்பட்ட போதிலும், | இணங்குகின்றேன்.<br><br>காலித் துறைமுகத்தின் பார்வையாளர் பாலத்தின் (Viewing Deck) புதுப்பித்து தருமாறு இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் உசாத்துணை கம்பனியினால் 2017.01.16 ஆந் திகதி கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அந்த பழுதுபார்த்தல் பணிகள் 2018 ஆம் ஆண்டின் போது துறைமுகங்கள் அதிகாரசபையினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்த பணிகள் தொடர்பில் 15% வற் வரியுடன் ரூபா 8,750,392.16 தொகை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையினால் குறித்த ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டமையால் அந்த தொகையை இலங்கை | பெற வேண்டிய மீதிகளை பகுப்பாய்வு செய்து நிச்சயமற்ற மீதிகள் தொடர்பில் அழிவுநட்ட ஒதுக்கம் மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அதற்காக அழிவுநட்ட ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | துறைமுகங்கள் அதிகாரசபைக்கு மீளளிப்பு செய்யுமாறு இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் உசாத்துணை சேவைகள் கம்பனிக்கு 2018.06.22 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த தொகையை செலுத்த முடியாதென துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் உசாத்துணை சேவைகள் கம்பனியினால் 2018.07.16 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. | |

### 1.5.3 இணக்கப்பாடின்றி கணக்குகளிலிருந்து அகற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்பாந்தோட்டை துறைமுகம் நிருமாணிப்பதற்காக பெற்றுக்-கொண்டிருந்த வெளிநாட்டு கடனகளில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆந் திகதியில் அதிகாரசபையின் கணக்குகளில் எஞ்சியிருந்த ரூபா.147,746 மில்லியன் தொகையிலான கடன் மீதியை, பொது திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் அல்லது அமைச்சரவையின் அனுமதியின்றி அதிகார சபையால் நிதிக் கூற்றுகளிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக அரசாங்கத்தில் எந்தவொரு கணக்கிலும் அந்தக் கடன் தொகை உள்ளடக்கப்பட-வில்லை. எவ்வாறெனினும், MPS/SEC/2017/32 மற்றும் 2017 யூலை 20 ஆந் திகதிய “அம்பாந்தோட்டை துறைமுக சலுகை ஒப்பந்தம்” எனும் பெயருடைய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு கிடைக்கப்பெற்ற அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் மேற்படிக் கடன் மீதியை மீள செலுத்தும் | இணங்கவில்லை.<br><br>அம்பாந்தோட்டை துறைமுகத்திற்குரிய வெளிநாட்டு கடன் சேவைப் பணிகள் (Loan Servicing) இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு அமைச்சரவை தீர்மானம் மூலம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன்படி துறைமுக அதிகார சபையால் உரிய கடன் மற்றும் வட்டி செலுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி 17/1580/737/018/IIஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் (iii) இன்கீழ் கடன் மீள செலுத்துவதற்குள்ள மொத்த மீதி பொது | குறித்த விடயங்கள் தொடர்பாக பொது திறைசேரியுடன் கலந்துரையாடப்பட்டு இறுதி இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

பொறுப்பானது பொது திறைசேரியினால் ஏற்றுக்கொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. பொது திறைசேரியில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஆவணங்கள் படி, 2019 ஆம் அண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் இந்தக் கடன் மீதி ரூபா. 178,628 மில்லியன் ஆக இருந்தது.

மேலும், மேற்படி கடன் தொகைக்கு ஏற்புடையதாக 2017 நவம்பர் மாதம் 30 ஆந் திகதி வரையிலான காலப் பகுதிக்கு கணக்கிடப்பட்ட அந்நியச் செலவாணி மாற்றங்களின ் நட்டம் ரூபா. 31,545 மில்லியன் தொகை ஆனதுடன், அது அதிகாரசபையின் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டி ருந்தது. 2017 நவம்பர் 30 அந் திகதி தொடக்கம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்நியச் செலவாணி திரட்டிய நட்டமான ரூபா 26,897 மில்லியன் தொகையும் அடங்கலாக, இந்த கடன் தொகை தொடர்பாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திரண்ட அந்நியச் செலவாணியின் மாற்றங்களின் நட்டம் ரூபா 58,442 மில்லியன் தொகையும் அதிகாரசபையின் அல்லது பொது திறைசேரியின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், மேற்படி அந்நிய செலாவணி மாற்ற நட்டத்தினை உள்ளடக்கிய கடன் மீதியை கணக்கு வைத்தல் தொடர்பில் பொது திறைசேரி மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை ஆகியவற்றுக்கிடையே இணக்கப்பாடொன்று எட்டப்படவில்லை.

அவ்வாறே, 2020 யூலை 06 ஆந் திகதிய நிதி அமைச்சரின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம், நிதி அமைச்சரால் குறித்த சொத்துக்கள் மற்றும் கடன் ஆகியன இலங்கை துறைமுக திறைசேரியால் ஏற்றுக்கொள்ளப்படுமென வும், அம்பாந்தோட்டை துறைமுகம் சார்ந்த கடன் தொகை தொடர்பான சேவை நடவடிக்கைகள் தொடர்ந்தும் இலங்கை துறைமுக அதிகார சபையால் நிறைவேற்றுதல் அவசியமற்றதெனவும் எனவும் அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் செயற்பாட்டு பணிகள் 99 வருட காலப்பகுதிக்காக அரச மற்றும் தனியார் பங்குடமைகள் இரண்டிற்கு ஒப்படைக்கப்பட்டு, அந்த கம்பனிகளின் பங்குகளை விற்பனை செயததன் மூலம் பெற்ற வருமானத்தினை பொது திறைசேரிக்கு வழங்கும் போது அந்த தொகையை கடன் மீதிக்கு எதிரீடு செய்யப்பட்டமையால், அதிகாரசபையின் கணக்குகளில் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்குரிய வெளிநாட்டு கடன் மீதியை அகற்றியுள்ளதுடன், அதன்படி உரிய கடன் தொகை நிதிக் கூற்றுகளிலிருந்தும் அகற்றப்பட்டுள்ளதாக 2018.02.23 ஆந் திகதிய கடிதம் மூலம் பொது திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரசபையின் புத்தகங்களுக்கு உட்படுத்துமாறு கட்டளையிடப்பட்டுள்ளதாகவும், அதன் பிரகாரம், 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை மேற்கொள்ளுமாறும் அதிகாரசபையின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5.4 கூட்டிணைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக குழுமத்திற்குரிய துணைக் கம்பனிகள் 3 காணப்படுவதுடன், அவற்றுள் ஒரு துணைக் கம்பனியான ஜயா கன்டெய்னர் டேர்மினல் கம்பனியின் 2019 ஆம் ஆண்டிற்கான வரைபு நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கி ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பில் 47 ஆம் குறிப்பின் பிரகாரம் துணைக் கம்பனியொன்றான மாகம்புர துறைமுக கம்பனி 2019 ஆம் ஆண்டிற்கான குழுமத்தின் நிதிக்கூற்றுக்களுடன் கூட்டிணைக்கப்படுவதில்லை என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மாகம்புர முகாமைத்துவக் கம்பனியின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் மீதிகள் குழுமத்தின் திரண்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கவனத்திற்கொள்ளப்பட்டது என அவதானிக்கப்பட்டது. மற்றைய நிர்வாக கம்பனியான லங்கா கேஸ் டேர்மினல் (தனியார்) கம்பனி 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருக்கவில்லை. | இணங்கவில்லை.<br><br>மாகம்புர துறைமுகங்கள் முகாமைத்துவக் கம்பனி இது வரையிலும் கலைக்கப்படவில்லை என்பதுன், 2019.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், 2018 ஆம் ஆண்டிற்குரிய மீதிகள் 2019 ஆம் ஆண்டின் போது முன்கொண்டுவரப்பட்டு 2019.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்களை ஒருங்கிணைக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.5 தீர்க்கப்படாத பெற வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்பாந்தோட்டை துறைமுகம் நிருமாணிக்கும் கருத்திட்டம் பொருட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட கடனுக்கு அதிகாரசபையினால் 2017 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 4,777 மில்லியன் தொகை மற்றும் முத்திரைக் கட்டணமான ரூபா 372 மில்லியனும் உள்ளடங்களாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 5,149.9 மில்லியன் தொகையும் பொது திறைசேரிக்கு பெற வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கையின் திகதி வரையிலும் அந்த பணம் அதிகாரசபைக்கு கிடைத்திருக்கவில்லை. மேலும், இது தொடர்பில் மீதி உறுதிப்படுத்தல்கள் அதிகாரசபையினால் கோரப்பட்டிருந்த போதிலும், திறைசேரியினால் அந்த உறுதிப்படுத்தல்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 2019 ஆம் ஆண்டிற்காக குடியரசின் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய மீதியொன்றாகவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக அந்த பணம் கிடைப்பது தொடர்பில் நிச்சயமற்ற நிலையொன்று நிலவியது. | இணங்குகின்றேன்.<br><br>உரிய பணத் தொகையினை மீண்டும் துறைமுக அதிகார சபையிடம் பெற்றுத் தருமாறு மூன்று சந்தர்ப்பங்களில் திறைசேரியின் செயலாளருக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், 2019.02.12 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது பணிப்பாளர் சபை பத்திரம் மூலம் அறிவிக்கப்பட்டு, பணிப்பாளர் சபையின் தீர்மானம்படி உரிய பணத் தொகையினை பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடலை மேற்கொள்வதற்கு வாய்ப்பு வழங்குமாறு துறைமுகம், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளரால் திறைசேரி செயலாளரினால் பொது திறைசேரியின் செயலாளர் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு மேற்படி தொகையை பெற்றுத்தருமாறு கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | பெற வேண்டியவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கடன் காலஎல்லையை விஞ்சிய மொத்த கப்பல் முகவர் கடன்பட்டோர் மீதி ரூபா 1,445.76 மில்லியன் ஆகும். அது மொத்த கப்பல் முகவர் மீதியில் 63 சதவீதமாக காணப்பட்டது. தலைவரினால் வரைபு அறிக்கைக்காக வழங்கப்பட்டிருந்த பதிலின் பிரகாரம் 2020 யூலை 24 ஆந் திகதியில் உள்ளபடியான அந்த கடன் மீதியில் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 364.34 மில்லியனாக காணப்பட்டது. | இணங்குகின்றேன்.<br><br>**கொழும்பு துறைமுகம்**<br><br>2019.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட கடடன் கால எல்லையினை விஞ்சிய மொத்த கப்பல் முகவரட கடன்பட்டோர் மீதி ரூபா 1,445,759,084.92 ஆகும். மேற்குறிப்பிடப்பட்ட 2019.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான கடன்பட்டோர் மீதியில் 2020.07.24 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலவிய மீதி ரூபா 364,341,748.77 வரை குறைவடைந்துள்ளது. | கடன் எல்லையை விஞ்சிய கடன்பட்டோர் மீதிகளை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பிரச்சினைக்குரிய கடன்பட்டோர் (Dispute Debtors) ரூபா 33,074,497 மற்றும் மீள சமரசத்திற்காக (Re-dispute) ஈடுபடுத்திய கடன்பட்டோர் ரூபா 3,341,598 மீதியும் காணப்பட்டது. இதனுள், ஆறு மாதங்கள், ஒரு வருடம், 1 முதல் 3 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதிகளினுள் தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகள் முறையே ரூபா 22,153,743 தொகை, ரூபா 8,795,405 மற்றும் ரூபா 2,125,349 ஆக காணப்பட்டது. | இணங்குகின்றேன்.<br><br>கொழும்பு துறைமுகத்தின் 2019.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான விவாதத்திற்குரிய பட்டியல்கள் (Dispute) கணக்கில் நிலவிய ரூபா 33,074,496.84 ஆன மீதி இது வரையிலும் தீர்க்கப்படாத பெறுமதி ரூபா 23,019,428.20 ஆக காணப்பட்டதுடன், இதற்குரிய விவாதத்திற்குரிய பட்டியல்களை தீர்ப்பதற்குரிய பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ள Re-Dispute கணக்கின் மீதிகளில் தீர்க்கப்படாத பெறுமதி ரூபா 24,758.68 ஆக இருந்ததுடன், அதனை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | பிரச்சினைகளை தீர்ப்பனவு செய்து அறவிடப்பட வேண்டியவற்றை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள்மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 இன் யூன் 02 ஆந் திகதிய இல பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | 2019 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அதிகாரசபையினால் நிலையான மற்றும் குறுகியகால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 46,565 மில்லியன் தொகைக்கு நிதி அமைச்சரின் அனுமதி பெறப்படவில்லை. | இணங்கவில்லை.<br><br>2019 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட வைப்புத் தொகைக்காக திறைசேரி செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சின் செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதோடு, ஏற்புடைய அனுமதியினைப் பெற்றுக்கொள்வது எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகும். | நிதி அதிகாரச்சட்டத்தின் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் அதிகாரச்சட்டத்தின் 10(5) ஆம் பிரிவு | அரசாங்க கூட்டுத்தாபனமொன்றின் ஏதேனுமொரு ஆண்டில் மிகை இருப்பின் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படி கழிப்பனவுகளை செய்த பின்னர் மீதியை திரட்டு நிதியத்தில் வைப்புச் செய்தல் வேண்டும். ஆயினும், 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை அதிகாரசபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தம் ரூபா 30,253 மில்லியன் தேறிய இலாபம் திரட்டு நிதியத்தில் வைப்பிலிடப்பட்டது ரூபா 600 மில்லியன் மாத்திரம் ஆகும். மேலும், மேற்படி | இணங்கவில்லை.<br><br>இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்திற்கு அமைய இலங்கை துறைமுக அதிகாரசபையை நிறுவும் போது அரசாங்கத்தினால் மேற்கொண்ட மூலதனத்தில் (Equity Capital) 8% உச்சவெல்லைக்கு உட்பட்ட வகையில் பங்கிலாபத்தினை வழங்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. | அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றில் ஏதேனும் வருடத்தில் மிகை இருப்பின் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கழிப்பனவுகளை செய்த பின்னர் மீதியை திரட்டு நிதியத்தில் வைப்பிலிட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதனால் நிதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமையால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இலாபத்திற்குள் நீண்டகால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கப்பட்டிருந்த தெற்காசிய பிரவேச தளம் (SAGT) மற்றும் கொழும்பு சர்வதேச கொள்கலன் தளம் (CICT) ஆகியவற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இரண்டு கம்பனிகளிடமிருந்து அதிகாரசபையினால் 2016 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட்டிருந்த தொகை மொத்தம் ரூபா 8,514 மில்லியன் தொகையும் குத்தகைக் கூலி மற்றும் அக்காலப் பகுதிக்கான அரசாங்கத்தின் பங்காக அறவிடப்பட்ட தொகை மொத்தம் ரூபா 11,250 மில்லியன் தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த இலாபம் துறைமுக அதிகாரசபையின் நேரடி செயற்பாட்டு வருமானம் அல்ல என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | 2015 மே 25 ஆந் திகதிய இல பீஈடீ 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 மற்றும் 3.1 பிரிவுகள் | மாதிரி பரிசோதனையின் போது அடையாளம் காணப்பட்ட வகையில் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு புறம்பாக மாதாந்த எரிபொருள் கொடுப்பனவாக 122 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தில் மட்டும் எரிபொருள் லீட்டர் 9,227 வழங்கப்பட்டிருந்தது. | இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆண்டொன்றின் 365 நாட்கள் 24 மணித்தியாலங்களும் சேவையில் ஈடுபடும் நிறுவனம் என்பதாலும், இந்த உத்தியோகத்தர்களின் இல்லங்களிலிருந்து நிறுவனத்திற்கு பயணம் செய்வதற்கு மேலதிகமாக மோதர முதல் கோல்பேஸ் | அமுலிலுள்ள சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதுடன், எல்லைகளை விஞ்சுவதற்காக அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வரையிலும் சுமார் 06 கிலோ மீற்றர்கள் தூரத்தில் சேவை நிலையம் அமைந்துள்ளதுடன், நாளொன்றிற்கு பல தடவைகள் அவற்றை கண்காணிக்க வேண்டியதுடன், அதற்காக மேலதிக எரிபொருள் தேவைப்படுகின்றது. | |
| (ஈ) | 2016 ஏப்ரல் மாதம் 29 ஆந் திகதிய இல பீஈடீ 03/2016 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை. | உழைக்கும் போது செலுத்தும் வரி தனிப்பட்ட சம்பளத்திலிருந்து கழித்து செலுத்த வேண்டியிருப்பினும் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு அந்த அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டுக்கு அவ்வாறு செலுத்தப்பட்ட ரூபா 384 மில்லியன் தொகையையும் உள்ளடக்கி 2011/2012 மதிப்பீட்டாண்டு முதல் 2019 திசெம்பர் மாதம் வரை மொத்தம் ரூபா 3,166 மில்லியன் தொகை உழைக்கும் போது செலுத்தும் வரி அதிகாரசபை நிதியத்திலிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.<br><br>மேலும், அரச நிறுவனங்களில் சேவை புரிவோருக்கு ஊக்குவிப்பு படிகளை செலுத்தும் போது அதன் மீதி உழைக்கும் போது செலுத்தும் வரி செலுத்தப்பட வேண்டிய போதிலும், | இணங்குகின்றேன்.<br><br>இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்காக உழைக்கும் போது அறவிடப்படும் வரி செலுத்தல்கள் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதோடு, 2019 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் நிறுத்தப்பட்டுள்ளது. | நிலவும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அந்த வரியை உத்தியோகத்தரிகளிடமிருந்து அறவீடு செய்யாது, 2019 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ஊக்குவிப்பு படிகளுக்காக உழைக்கும் போது செலுத்தும் வரியாக அதிகாரசபையின் நிதியங்களிலிருந்து ரூபா 52 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (உ) | 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க நிதி மற்றும் வெகுசன ஊடகத்தின் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக ஒருங்கிணைந்த உடன்படிக்கைகளின் கீழ் மேற்கொள்ளப்படும் சம்பள ஏற்றத்திற்கு மேலதிகமாக 2018 ஆம் ஆண்டு முதல் அதிகாரசபையின் 560 நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு பதவிகளின் அடிப்படையில் மாதாந்தம் ரூபா 15,225 முதல் ரூபா 31,150 வரையிலும் சம்பள ஏற்றம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் போது ஊழியர்களுக்கு சம்பள ஏற்றம் வழங்குவதற்காக ஒருங்கிணைந்த உடன்படிக்கையில் (Collective Agreement) நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>அதனால், நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களின் சம்பளங்களை அதிகரிப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், இது தொடர்பில் பொருத்தமான விகிதாசாரத்திற்கமைய நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களின் சம்பளங்களை மீளாய்வு செய்து தீர்மானம் எடுத்தல் பொருத்தமானது என குறிப்பிடப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் மூலம் கொடுப்பனவுகள் உறுதிப்படுத்தப்பட்டிராததுடன், சம்பள கட்டமைப்பினை மீளாய்வு செய்யுமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. அதனால், குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளை விஞ்சி செயற்படலாகாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய இல பீஈடி/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 பிரிவு | ஏதேனுமொரு நிறுவனத்தினால் ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரித்து அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையினால் வரைபு ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களதின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>துறைமுகங்கள் அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையை அங்கீகரிக்கும் வரையிலும், அதிகாரசபையின் அனைத்து ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுகளையும் மேற்கொள்ளகூடாது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையினால் 2019 ஆம் ஆண்டினுள் மாத்திரம் 02 முதநிலைப் பதவிகளுக்காக மற்றும் 432 உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமையாளரொருவர் இணைத்துக்கொள்ளப் பட்டிருந்ததுடன், 22 பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. | இணங்குகின்றேன்.<br><br>ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக இது வரையிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | முறையான ஆட்சேர்ப்புத் திட்டமொன்றை தயாரித்து ஏற்புடைய அனுமதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | இரட்டை சேவையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் மற்றும் அடிப்படை சேவைக் கூற்று வழங்கப்படாத சேவையாளர்களுக்காக வரி சட்டகம் 07 இன் பிராகரம் நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கு கொடுப்பனவுகளை செலுத்தும் போது நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்பாது செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர்களின் உழைக்கும் போது செலுத்தும் வரி கழிக்கப்பட வேண்டுமா என்பதை பரிசோதித்து எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின தேவைப்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய அரச பெறுகைகள் சுற்றறிக்கையின் NPA/0.8 ஆம் இலக்க (பெறுகைகள் கையேடு) இன் 5.4.12 மற்றும் 2006 மார்ச் 01 ஆந் திகதிய அரச பெறுகைகள் சுற்றறிக்கையின் NPA/09 ஆம் இலக்க (வழிகாட்டிக் கோவை) 2.14.1 ஆம் பந்தி | தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம், அதிகாரசபையினால் 2018 சனவரி முதல் 2019 ஆகஸ்ட் வரையிலுமான காலப்பகுதியில் விறாந்திற்காக ரூபா 493.91 மில்லியன் செலவிடப்பட்டு அரசி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக முறையான பெறுகைகள் குழுவின் அல்லதுதொழில்நுட்ப குழுவினால் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன்.<br><br>அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளவாறு எதிரல்காலத்தில் கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>துறைமுகங்கள் மற்றும் கடற்படை அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 2020.05.26 ஆந் திகதிய கடித்தின் மூலம் விறாந்தைப் பகுதியின் பெறுகை நடைமுறையினை மீளாய்வு செய்வதற்காக உப தலைவர் / முகாமைத்துவ பணிப்பாளரினால் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது | பெறுகைகளை மேற்கொள்ளும் போது பெறுகைகள் கையேட்டின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | டன், அந்த குழுவின் மூலம் கலந்துரையாடி உரிய சீராக்கங்களை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஐ) | 2017 செப்தம்பர் 20 ஆந் திகதிய இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் உள்ளக சுற்றறிக்கை இலக்கம் 2017/26 இன் 6 ஆம் பந்தியின் I மற்றும் II ஆம் பந்தி | அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் உத்தியோகபூர்வ இல்லங்களில் வதிவதற்கு வழங்கப்படும் கால எல்லை, முதலாவதாக வீட்டினை வழங்கிய நாள் முதல் 5 வருடங்களுக்கு மட்டுப்படுத்தப்படுவதுடன், அந்த காலப்பகுதி நிறைவடைந்த பின்னர் மேலும் ஒரு வருடம் வதியும் உத்தியோகத்தர்களின் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 12.5 சதவீதத்தினை அறவிட்டு வீடமைப்பு குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தங்கியிருக்க முடியும். எவ்வாறெனினும், அதிகாரசபையினால் முன்வைக்கப்பட்ட தகவ்லகளின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 6 வருடங்கள் முதல் 28 வருடங்கள் வரை குறித்த வீடுகளிலிருந்து வெளியேறாது வசிக்கும் | இணங்குகின்றேன்.<br><br>நீண்ட காலமான வீடுகளை ஒதுக்குதல் / வீட்டு நலனாளிகளை 05 வருடங்களின் பின்னர் வெளியேற்றுதல் மற்றும் கட்டணங்களை அறவிடுதல் ஆகியன சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ள முடியாதுள்ளது. அதனால், தற்போதைய அதிகாரியினால் அதனை திருத்துவதற்காக உப தலைவரின் தலைமையில் மற்றும் பிரிவு தலைவரிகள் சிலரினை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவினால் இந்த நிலைமை தொடர்பில் கற்கையொன்றினை மேற்கொண்டு, நிலவும் சுற்றறிக்கை, சட்டங்கள், விதிகள் மற்றும் அரசின் சட்ட திட்டங்களுக்கு இணங்க கட்டணங்களை அறவிடுவதற்கும், தொடர்ந்தும் நிலவும் தவறுகள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும் | நிலவும் சுற்றறிக்கைகளின் குறைபாடுகளையும் திருத்த வேண்டியதுடன், உத்தியோகத்தர்களுக்கு இல்லங்களை வழங்குதல் தொடர்பில் முறையான மற்றும் நியாயமான நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 379 என்பது வெளிப்படுத்தப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஒ) | 2018 பெப்ரவரி 15 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க வர்த்தக மற்றும் முதலீட்டு சுற்றறிக்கையின் 1.9 (i) மற்றும் 3.4 ஆம் பிரிவு | மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக, அதிகாரசபையில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு சலுவை வரி தீர்வையின் அடிப்படையில் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்காக சுழற்சி சேவைக் காலத்தினை கணிப்பிடும் போது, அந்த உத்தியோகத்தர் சேவை நிறுத்தத்திற்கு உட்பட்டிருந்த 06 மாத காலமும் கருத்திற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதிகாரசபையினால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகளின் அடிப்படையில் மேற்படி உத்தியோகத்தருக்கு வரி தீர்வையின் அடிப்படையில் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரமொன்றை வழங்கியிருந்த போதிலும், இது வரையிலும் குறித்த பணத்தை அறிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.8 தகவல் தொழில்நுட்ப (IT) பொதுக் கட்டுப்பாட்டு முறைமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதியுயர் பாதுகாப்பு வலயமாக பெயரிடப்பட்டுள்ள துறைமுகத்தின் பாதுகாப்பினை பாதுகாப்பதற்காக 2017 | கொழும்பு துறைமுகத்தின் பாதுகாப்பிற்காக முறையான பாதுகாப்பு திட்டமொன்று கடற்படை மற்றும் பாதுகாப்பு | செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் அமுல்படுத்த திட்டமிடப்பட்டிருந்த |

| | | |
|---|---|---|
| மற்றும் 2018 ஆம் ஆண்டின் போது முதலீட்டு பாதீட்டின் மூலம் அனைத்து கடவைகள் மற்றும் இணைப்பு வேலிகளுக்கு முறையே ரூபா 60 மில்லியன் மற்றும் ரூபா 150 மில்லியன் செலவிடப்பட்டு CCTV கெமரா கட்டமைப்பொன்றினை பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது அதற்காக ரூபா 150 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்த்தவாறு குறித்த பணி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பாதுகாப்பு தொடர்பான பிரச்சினையின் போது தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாது போகும் அபாயமொன்று நிலவுகின்றமையை புறக்கணிக்க முடியாது. | பிரிவு அணைந்து நடைமுறைப்படுத்துவதுடன், தேவையான தகவல்களை செயற்திறனாக பெற்றுக்கொள்ள CCTV கெமரா கட்டமைப்பொன்றினை பொருத்துவதற்கான தேவைப்பாடு பாதுகாப்பு பிரிவினால் இனங்காணப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டின் மூலம் கொழும்பு துறைமுகத்தின் அனைத்து நுழைவாயில்களையும் உள்ளடக்கும் வகையில் CCTV கெமரா கட்டமைப்பொன்றினை பொருத்துவததற்காக ரூபா 50 மில்லியன் ஒதுக்கப்பட்டது.<br><br>அவ்வாறே, அமைச்சரவையினால் பெயரிடப்பட்ட பெறுகைகள் கழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவொன்று நியமிக்கப்படுள்ளதுடன், அதன் பிராகரம் மேற்படி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளது. | பணிகளை திட்டமிட்டவாறு முன்னெடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட இணைந்த நிதிக்கூற்றுக்கு அமைய மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான குழு மொத்த இலாபம் ரூபா 11,264 மில்லியன் மற்றும் அதிகாரசபையின் இலாபம் ரூபா 11,646 மில்லின் ஆகும். கடந்த ஆண்டில் குழுமத்தின் மற்றும் அதிகாரசபையின் இலாபம் முறையே ரூபா 3,064 மில்லியன் மற்றும் ரூபா 4,247 மில்லியன் ஆகும். அதனை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது குழுமத்தின் மற்றும் அதிகாரசபையின் நிதிசார் விளவை முறையே ரூபா 8,200 மில்லியன் தொகை மற்றும் ரூபா 7,399 மில்லியனால் தொகையில் அதிகரித்துள்ளது. அதிகாரசபையின் கடந்த ஆண்டின் அந்நியச் செலாவணி நட்டமான ரூபா 11,317 மில்லியன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,359 மில்லியன் அந்நியச் செலாவணி இலாபம் வரையிலும் அதிகரித்தது நிதிசார் விளைவு அதிகரிப்பதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் செல்நெறி பகுப்பாய்வு

i. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகாரசபையின் வருமானம் ரூபா 2,223.50 மில்லியனால் அதாவது 5.7 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், மற்றும் வேறு செயற்பாட்டு வருமானங்கள் ரூபா 427.58 மிலலியனால் அதாவது 3.69 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

ii. 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிர்வாக செலவுகள் 69 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், அந்நிய செலாவணி நட்டம் நடப்பாண்டில் 112 சதவீதத்தால் குறைவடைந்து அந்நிய செலாவணி இலாபமொன்றை காண்பிப்பதாக அவதானிக்கப்பட்டது.

iii. மொத்த வருமானத்திற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டு 22.90 சதவீதமாக காணப்பட்ட செயற்பாட்டு இலாபம் 2019 ஆம் ஆண்டில் 38.92 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன், 2018 ஆம் ஆண்டிலிருந்து 11.02 சதவீதமாக காணப்பட்ட தேறிய இலாப வீதம் 2019 ஆம் ஆண்டில் 28.57 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

iv. 2018 ஆம் ஆண்டில் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் முறையே 3.29:1 மற்றும் 3.15:1 ஆக இருந்ததோடு மீளாய்வாண்டின் இறுதியில் அது முறையே 2.66:1 ஆகவும் மற்றும் 2.57:1 வரை குறைவடைந்திருந்தது.

v. நேரடி செயற்பாட்டு தேறிய இலாபம் வருமானத்தின் சதவீதமாக எடுக்கும் போது 2018 ஆம் ஆண்டின் போது 8.77 சதவீதமாக காணப்பட்டதுடன், அது மீளாய்வாண்டின் போது 10.55 சதவீதம் வரையிலும் அதிகரித்திருந்தது.

vi. அதிகாரசபையின் பதவியணி கிரயம் மொத்தக் கிரயத்தின சதவீதமாக கருத்திற்கொள்ளும் போது 2018 ஆம் ஆண்டின் போது 46.16 சதவீதமாக காணப்பட்டதுடன், அது மீளாய்வாண்டின் இறுதியளவில் 50.18 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

vii. உரிமை மூலதனம் நீண்ட கால கடன் விகிதம் 2018 ஆம் ஆண்டின் போது 3.91:1 ஆக காணப்பட்டதுடன், அது மீளாய்வாண்டின் போது 4.59:1 ஆக அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக 1347 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும், அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு (Operations) நேரடியாக தொடர்புள்ள பிரிவுகளின் 464 ஊழியர்கள் வெற்றிடம் காணப்பட்டது. அவ்வாறே அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக நேரடி தொடர்பற்ற 13 பிரிவுகளில் 653 பேரின் மிகை காணப்பட்டது. எவ்வாறெனினும், 2019 ஆம் ஆண்டில் ஊழியர் மிகை காணப்பட்ட பிரிவுகளின் ஊழியர்களுக்காக ரூபா. 1,156 மில்லியன் தொகை மேலதிக நேர கொடுப்பனவு உட்பட | இணங்கவில்லை.<br><br>இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் பல்வேறு பிரிவுகளுக்காக கடமைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் ஓடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், 2019 ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த மேலதிக நேர படிகளுக்கான செலவினம் ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவினை விஞ்சவில்லை.<br><br>எனினும், 10 பிரிவுகளின் உள்ளபடியான மேலதிக நேர படிகளுக்கான செலவினம் பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவினை விஞ்சியுள்ளது. அவற்றுள் | ஆளணியை பயனுள்ள சேவையில் ஈடுபடுத்தி மேலதிக நேரச் செலவுகளை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 4,787 மில்லியன் தொகைஊழியர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.<br><br>மேலும், தாபனவிதிக் கோவையின் viii ஆம் அத்தியாயத்தின் 2 (I) ஆம் பிரிவின் பிரகாரம், மேலதிக நேரப் படிகளை பெற்றுக்கொள்ள போதியளவான மேலதிக பணிகள் உரிய மற்றும் நியாயமான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் ஒருவரால் தேடிப்பார்த்து திருப்திகொள்ள வேண்டும். அதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ள வேலையின் அளவு நிறைவேற்றப்படுவதாகவும், செயற்பாடற்று உள்ள காலத்திற்கு மேலதிக நேரப் படிகள் செலுத்தப்படுவதில்லை என்பதையும் பார்த்துக்கொள்ளும் பொருட்டு உரிய பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கைகளை பேணும் நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். எனினும், மேற்படி மேலதிக நேர படிகள் தொடர்பான செய்வேலை அறிக்கைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | பெரும்பாலானவை நேரடியாக செயற்பாட்டு பணிகளுக்கு பங்களிப்பு செய்யும் பிரிவுகள் என்பதால் அந்த பிரிவுகளின் மேலதிக நேர படிகளிலான அதிகரிப்பானது கடமை நோக்கிலான அதிகரிப்பாகும்.<br><br>எவ்வாறெனினும், உள்ளபடியான மேலதிக நேர படிகளுக்கான செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினம் ஆகியவற்றை சமநிலையில் பேண வேண்டுமென குறித்த பிரிவு / பகுதித் தலைவர்களுக்க அறிவிக்கப்பட்டது. அவ்வாறே, எதிர்வரும் நிதியாண்டில் உள்ளபடியான நிதி செலவினம் மற்றும் பாதீட்டு ஒதுக்கீடு தொடர்பான மாதாந்த அறிக்கைகள் ஒவ்வொரு பிரிவுத் தலைவர்களுக்கும் அனுப்பி வைப்பதன் மூலம் இந்த நிலைமையை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2011 ஆம் ஆண்டு இலங்கை சுங்கத்திற்கு அறிவிக்காது இறக்குமதி செய்யப்பட்ட 27 பாரந்தூக்கிப் பொறி தொடர்பில் சுங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த ரூபா 1,580 மில்லியன் தொகையிலான சுங்க அபராத தொகையினை குறைத்துக்கொள்வதற்காக சுங்க கட்டளைச் சட்டத்தின் 165 ஆவது பிரிவின் பிரகாரம் சுங்க விசாரணையொன்றின் தீர்மானத்திற்கு அமைய நிதி அமைச்சருக்கு மேன்முறையீடு | இந்த வழக்கின் பணிகள் இதுவரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், இந்த விடயத்திற்கு ஏற்புடையதாக 2018.05.22 ஆந் திகதிய அமைச்சரவையின் தீர்மாகத்தினை கருத்திற்கொண்டு இந்த பிரச்சினையை சமரசத்திற்க கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் | முரண்பாட்டினை இயலுமான விரைவில் தீர்ப்பதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒன்றினை செய்ய முடியுமெனினும் அதிகாரசபையினால் அமைச்சருக்கு அவ்வாறானதொரு மேன்முறையீடு சமர்ப்பிக்கப்படவில்லை. எவ்வாறெனினும், இது தொடர்பில் கணக்குகளில் ரூபா 1,577.7 மில்லியன் நிபந்தனை பொறுப்புக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேற்படி விடயம் குறித்து அதிகாரசபை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்ததோடு, அதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளைக்கு எதிராக 2018 ஆம் ஆண்டின் போது மேன்முறையீடொன்று உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்தது. | துறைமுகங்கள் மற்றும் கடற்படை அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. | |
| (இ) | 2010 ஆம் ஆண்டின் போது சவுத் ஏசியா கேட்வே டேர்மினல் லிமிடட் (South Asia Gateway Terminal Ltd – SAGT) கம்பனி ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட மூன்று பாரந்தூக்கிகளின் பெறுமதியினை பரிமாற்றம் செய்வதற்காக ரூபா 141.63 மில்லியன் பெறுமதிக்கு அந்த கம்பனியின் பங்குகளை அதிகாரசபைக்கு வழங்குமாறு இணக்கப்பாடு காணப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், குறித்த பங்குகளின் உரித்து அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிராததுடன், குறித்த கம்பனியால் பங்குகளை வழங்குவதாக உறுதிப்படுத்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் சவுத் | உரித்து கிடைக்கவில்லை என்பதுடன் இணங்குகின்றேன்.<br><br>துறைமுகங்கள் அதிகாரசபையினால் தற்போது கிடைப்பதற்குள்ள உரித்தான ரூபா 141,632,993 ஆன தொகை SAGT கம்பனியிடமிருந்து பெற வேண்டிய பணமாக கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.<br>அதற்குரியதாக SAGT கம்பனியின் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்த தொகை அதிகாரசபையின் அங்கீகாரமின்றி பதிவழிப்பதற்கு SAGT கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது. | குறித்த கம்பனியுடன் கலந்துரையாடி உரித்து தொடர்பான இறுதித் தீர்மானம் எட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏசியா கேட்வே டேர்மினல் லிமிடட் கம்பனியுடன் உடன்படிக்கை செய்யப்பட்ட கடப்பாடொன்று ஏற்படுத்தப்பட்டிராதமையால் அதிகாரசபைக்கு குறித்த கம்பனியின் பங்குகள் கிடைப்பது தொடர்பில் நிச்சயமற்ற நிலையொன்று காணப்பட்டதுடன், கம்பனியினால் அது தொடர்பில் அழிவு நட்ட ஒதுக்கமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>அதிகாரசபையின் தலைவரால் வரைபு அறிக்கைகளுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கிய பதிலின் பிரகாரம், இதற்கு உரியதாக சவுத் ஏசியா கேட்வே டேர்மினல் லிமிடட் கம்பனியின் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்த தொகை அதிகாரசபையின் இணக்கப்பாடின்றி பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பததாக குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | அதிகாரசபையின் பிரதி தலைமை முகாமையாளர் (வளாகம்) இன் வளாகம்1/1/156 மற்றும் 2020 யூன் 30 ஆந் திகதிய கடிதத்தின் பிராகரம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான 3 ஏக்கர் 2 ரூட் மற்றும் 3.163 பேர்ச் மற்றும் 49.034 கன மீற்றர்கள் பரப்புடைய 10 காணித் துண்டுகள் தொடர்பில் கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கைகளில் உடன்படிக்கை கைச்சாத்திட்ட காலப்பகுதிகள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிறைவடைந்திருந்தது. எவ்வாறெனினும், உடன்படிக்கையை நாளதுவரையாக்குவதற்கு (Renew) உரிய பணிகள் | இணங்குகின்றேன்.<br><br>இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கைச்சாத்திடப்பட்டுள்ள குத்தகை உடன்டிபக்கைகள் 03 வருட, 05 வருட, ஆகிய குறுங்காலத்திற்கும், 30 வருடம், 35 வருடங்களான நீண்ட காலத்திற்கும் காணப்படுகின்றது. இந்த ஒவ்வொரு உடன்படிக்கையும் நிறைவடைவதற்கு ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு முன்னர் மீள உடன்படிக்கையை புதுப்பிப்பதற்காக பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும், மீள குத்தகைக்கு வழங்கும் போது அரசின் மதிப்பீட்டு அறிக்கை வழங்கும் போது | குத்தகை உடன்படிக்கையை நாளதுவரையாக்குவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரசபையினால் முன்னெடுக்கப்பட்டிராமையால் சட்டரீதியான சிக்கல்கள் ஏற்படும் என்பதை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது. | கருதிற்கொள்ளக்கூடிய தாமதங்கள் விலைமதிப்பீட்டு திணைக்களத்தில் இடம்பெறும் சந்தர்ப்பங்கள் உள்ளன. அவ்வாறே சில சந்தர்ப்பங்களில் பல்வேறு நிர்வாக காரணங்களால் உரிய அங்கீகாரம் தாமதமடையும் சந்தர்ப்பங்களில் தவிர்ந்த ஏனைய அனைத்து சந்தர்ப்பத்திலும் உரிய காலத்தினுள் உடன்படிக்கையை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (உ) | சீஓ/சீஓஎல்/2012/1047 ஆம் இலக்க வரைபட இலக்கமுடைய கொழும்பு டீ.ஆர். விஜயவர்த்தன மாவத்தயில் அமைந்துள்ள சுமார் 1.1372 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணி தாமரைக் கோபுரத்தினை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்து கையளிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய நடைமுறைக்கமைய உரித்துறுதியொன்றின் மூலம் உரித்து கையளிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>தலைவரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்ட பதிலின் பிரகாரம், கொழும்பு பிரதேச செயலாளரினால காணி தொடர்பில் நட்டஈடு பற்றி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், குறித்த நட்டஈட்டு அறிக்கைகள் 2020 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிராமையால் குறித்த காணியை சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து நீக்க முடியாதிருந்தது.<br><br>எவ்வாறெனினும், நிதிக்கூற்றுக்களுக்கான | இணங்குகின்றேன்.<br><br>துறைமுக அதிகாரசபைக்குரிய கொழும்பு 10, டீ.ஆர். விஜயவர்த்தன மாவத்தையில் அமைந்துள்ள தாமரைக் கோபுரத்தினை நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியை காணிகளை சுவீகரிக்கும் அதிகாரச்சட்டத்தின் 38(ஆ) பிரிவின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் உரித்து கையேற்கப்பட்டுள்ள போதிலும், நட்டஈடு வழங்கி காணியின் உரித்து பெறப்பட்டிருக்கவில்லை.<br><br>இது தொடர்பான நட்டஈட்டு விசாரணை கொழும்பு பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் போது எமது உரித்தினை சான்றுபடுத்துவததற்குரிய எம்மிடமுள்ள அனைத்து ஆவணங்களும் முன்வைக்கப்பட்டுள்ளது. நட்டஈட்டு பரிசோதனையின் அறிக்கையினை வழங்குமாறு பிரதேச செயலாளரிடம் கோரப்பட்ட போதிலும், அந்த | உரிய தரப்பினருடடன் கலந்துரையாடி இறுதி முடிவு எட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பு இலக்கம் 57 இன் பிரகாரம், இந்த காணிக்காக நட்டஈடாக கொழும்பு பிரதேச செயலகத்திடமிருந்து ரூபா 4,496 மில்லியன் கோரப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | அறிக்கையின் முடிவுரை / அறிக்கை இது வரையிலும் எமக்கு கிடைக்கவில்லை. | |
| (ஊ) | எல்/எஸ்/எம்ஜஎஸ்/344 ஆம் வரைபட இலக்கமுடைய கொழும்பு 01, நேர் வீதிக்கும் ஒல்கொட் மாவத்தைக்கும் எல்லையில் அமைந்துள்ள சுமார் 02 ஏக்கர் பரப்பளவான காணிகள் சுங்கத் திணைக்களத்திற்கு கட்டிடமொன்றினை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும், காணியை மதிப்பீடு செய்து சட்டரீதியாக உரித்தினை கையளிக்கும் பணிகள் 2020 யூலை 31 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுங்கத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினை நிர்மாணிப்பதற்காக துறைமுக அதிகாரசபையால் வழங்கப்பட்ட சுமார் 02 ஏக்கர் பரப்பான காணிக்காக கைமாறாக சுங்கத் திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்பட்ட தாது கோபுரத்தின் அருகில் அமைந்துள்ள 94 பேர்ச் பரப்பளவான காணி 1981 இன் வாயில் இலக்கம் 01 இனை நிர்மாணிக்கும் போது வழங்கப்பட்டுள்ளமையால், அவை ஒன்றுக்கொன்று மதிப்பீடு செய்யப்பட்டு வேறுபாடொன்று காணப்படுமாயின் காசு கொடுத்து தீர்ப்பதற்கு ஆரம்ப கலந்துரையாடலின் போது இணக்கம் காணப்பட்டிருந்தது.<br><br>பின்னர் இந்த பணிகளை மேற்கொள்ளும் போது மேற்குறிப்பிடப்பட்ட 94 பேர்ச் பரப்பளவான காணியும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமானது எனும் விடயங்கள் முன்வைக்கப்பட்டது. இதன் காரணமாக இந்த காணியின் பரிமாற்றம் தொடர்பில் இறுதித் தீர்மானமொன்றிற்கு வர முடியாதிருந்தது. | உரிய தரப்பினருடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்திற்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | அதிகாரசபைக்கு சொந்தமான பிரதான செயற்பாட்டு கொள்கலன் தளமான ஜெயா கன்டெய்னர் டேர்மினலின் செயற்பாட்டு நடவடிக்கைகளை போட்டித் தன்மையுடனும் அதிக செயற்திறனுடனும் மேற்கொள்ளும் நோக்கில் 30 கொள்கலன் டிரெக்டர்களை கொள்வனவு செய்வதற்கு 2019 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 19/2051/129/028 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அவ்வாறே, 2019 ஆம் ஆணடிற்கான அதிகாரசபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் இதற்காக ரூபா 600 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், கொள்வனவு பணிகளின் 50 சதவீதம் 2019 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஆண்டினுள் விலைக்கேள்வி கோரல் பணிகள் (Bid Called) மாத்திரம் இடம்பெற்றிருந்தது. மேலும், 2020 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பொருத்தமான வழங்குநரைத் தெரிவு செய்ய அதிகாரசபை தவறியிருந்தது. | 30 கொள்கலன் டிரெக்டர்களுக்காக CES/FP/05/PT/6051 ஆம் இலக்க கோவை திறக்கப்பட்டு துறைமுகங்கள் அதிகாரசபையின் கோரிக்கையின் அடிப்படையில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சினால் 2020.02.29 மற்றும் 2020.03.01 ஆகிய இரு திகதிகளில் கூறுவிலை கோரல் பத்திரிக்கை அறிவித்தல்களை மேற்கொண்டு துறைமுகங்கள் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டது.<br><br>இதன் பின்னர் விலைக்கேள்வி விடுவித்தல் மேற்கொள்ளப்பட்ட போதிலும், நாட்டினுள் ஏற்பட்ட நிலைமை காரணமாக அமைச்சினால் குறித்த தினத்தில் விலைக்கேள்வி திறத்தல் இடம்பெற்றிருக்கவில்லை.<br><br>இதன் பின்னர், நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக துறைமுகங்கள் அதிகாரசபையின் நிதி நிலைமையை கருத்திற்கொண்டு மூலதனச் செலவினங்களை கட்டுப்படுத்தலின் பெறுபேறாக இந்த கொள்வனவு 2021 ஆம் ஆண்டிற்கு பிற்போடப்படுவதாக உப தலைவரின் CES/FP/05/PT/6051(MP) ஆம் இலக்க 2020.06.22 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்திற்கு தேவையான கொள்வனவுகள் திட்டமிடப்பட்டவாறு மேற்கொள்வதன் மூலம் அதிகாரசபையின் செயற்திறனை அதிகரித்துக்கொள்ள முடியும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | தெற்கு பிரதேசத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் காலித் துறைமுகத்தில் பல்நோக்கு கொள்கலன் தளமொன்றினை நிர்மாணிப்பதற்காக 2006 மார்ச் 28 ஆந் திகதி இலங்கை அரச மற்றும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி (JBIC) ஆகியவற்றுக்கிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கையின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டிருந்த போதிலும், உலக மரபுரிமையாக பெயரிடப்பட்டுள்ள காலிக் கோட்டையை அண்மியதாக இந்த நிர்மாணங்களை மேற்கொள்வதற்காக யுனெஸ்கோ (UNESCO) அமைப்பின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தமையால் கடன் வழங்குநரால் கடன் காலப்பகுதியை நீடிப்பு செய்யாமையால் இந்த செயற்திட்டத்தை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், இதற்காக செலவிடப்பட்ட | தெற்கு பிரதேசத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் காலித் துறைமுகத்தில் பல்நோக்கு கொள்கலன் தளமொன்றினை நிர்மாணிப்பதற்காக 2006 மார்ச் 28 ஆந் திகதி இலங்கை அரச மற்றும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி (JBIC) ஆகியவற்றுக்கிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட SLP-85 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் யென் 14,495 மில்லியன் தொகையை அலங்கை அரசிற்கு வழங்குவதற்கு இலங்கை அரசிடம் இணக்கம் தெரிவித்திருந்தது. 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை அரசின் கோரிக்கையின் அடிப்படையில் இந்த கடன் உடன்படிக்கை 2017 யூலை மாதம் வரையிலும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி (JBIC) ஆல் நீடிப்பு செய்யப்பட்டது. இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சுடன் இணைந்து இந்த செயற்திட்டத்திற்காக UNESCO இன் அங்கீகாரத்தினை கோரி, அதற்கான நிபந்தனையுடனான அங்கீகாரம் 2016 ஆம் ஆண்டு கிடைத்திருந்தது.<br><br>JBIC நிறுவனத்தினால் வழங்கப்படும் கடன் தொகையின் கீழ் கடவையொன்றினை மாத்திரமே நிர்மாணிக்க இயலும் என்பதால் இந்த செயற்திட்டத்தினை தற்போது நடைமுறைப்படுத்தினால் எதிர்பார்த்த நலன்கள் | செயற்திட்டத்தினை திட்டமிடும் போது போதியளவான மற்றும் முறையான சாத்தியவள மதிப்பீடொன்று, கிரய நலன் பகுப்பாய்வு மற்றும் தேசிய ரீதியில் நிலவும் தேழவப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நாட்டிற்கு கிடைக்காது என்பதால் அரசினால் இந்த செயற்திட்டம் 2017 ஆம் ஆண்டில் இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டிருந்துத. | |

**3.2 தொழிற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு துறைமுகத்தில் தற்போது கொள்கலன்களை கையாளுவதற்கு பயன்படுத்தும் தளங்களில் ஆழம் (Draft) மீட்டர் 14.25 க்கு கூடிய கப்பல்கள் வரமுடியுமான ஒரே தளமான கொழும்பு சர்வதேச கொள்கலன் தளம் (C.I.C.T) மட்டுமாகும். அதன் கொள்ளளவு இருபது சம அலகு 2.4 மில்லியன் ஆகும். 2019 ஆம் ஆண்டில் அந்த தளத்திற்கு ஆழம் மீட்டர் 14.25 க்கு கூடிய 374 கப்பல்கள் வந்துள்ளன. மொத்த கொள்கலன் அலகுகள் 2.6 மில்லியனுக்குக்கு கூடிய எண்ணிக்கை கையாளப்பட்டிருந்தது. அது உச்ச அளவை விஞ்சிய ஒரு நிலையாக அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது தளத்தின் கொள்கலன்களை கையாளுதல் 8 சதவீத அதிகரிப்பு காணப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டின் போது ஸ்கொட் மற்றும் வில்சன் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட கற்கையொன்றின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டளவில் கொழும்பு துறைமுகத்திலுள்ள கொள்கலன் இயலளவு அதன் உச்சத்தை அடையும் எனவும், அதன் போது ஏற்படும் கேள்விக்கு முகங்கொடுக்கும் நோக்கில் கிழக்கு கொள்கலன் தளம் செயற்படு நிலைக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் அதில் உள்ளடங்கியுள்ள தரவுகள் சரியானவை ஆகும். | தேசிய ரீதியில் இழக்கப்பட்டுவரும் கொள்கலன் விநியோக சேவை வருமானத்தினை பெற்றுக்கொள்வதற்காக கிழக்கு கொள்கலன் தளம் செயற்படு நிலைக்கு உட்படுத்தல் மிகவும் முக்கியத்துவமானது ஆகும். இதனை அதிகாரசபையின் கீழ் நடைமுறைப்படுத்துவதன் மூலம் அதிகாரசபையின் சந்தை பங்கிகை காத்துக்கொள்ள முடியும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதற்கிடையில் கொழும்பு துறைமுகத்தினை விரிவாக்கும் செயற்திட்டத்திற்குரியதாக இலங்கை வங்கியிலிருந்து நிதிகளை பெற்று 800,000 கொல்களன் அலகுகள் வருடாந்த இயலளவுடைய ரூபா 11,168 மில்லியன் கிரயமான 18 மீட்டர்கள் ஆழத்துடன் மற்றும் 440 மீட்டர்கள் நீளமுடைய கிழக்கு கொள்கலன் தளத்தின் கட்டம் 1 இன் நிர்மாணப் பணிகள் 2016 ஏப்ரல் மாதத்தின் போது நிறைவுசெய்யப்பட்டிருந்தன. மேலும், 2019 மே 28 ஆந் திகதி இந்த கொள்கலன் தளத்தின் செயற்பாட்டு பணிகளை மேற்கொள்வதற்காக இலங்கை, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்று (Memorandum of Corporation) கைச்சாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் கிழக்கு கொள்கலன் தளம் செயற்படு பணிகளுக்காக திறக்கப்பட்டிராததுடன், கொள்கலன் சேவைகளின் கேள்வி தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிவிபரங்கள் இல்லாதிருந்தமையால் இழக்கப்பட்ட கொள்கலன் கேள்வி மற்றும் அதன் அடிப்படையில் முறைமுகம் எனும் ரீதியில் இழக்கப்பட்ட வருமானம் தொடர்பில் கணிப்பிட முடியாதிருந்தது. | | |
| (ஆ) | 2017 யூலை 26 ஆந் திகதிய அமப/17/1479/737/025 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் ஜயா கன்டெய்னர் டேர்மினலுக்காக கப்பல் முதல் தளம் வரையிலும் செயற்பாட்டு பணிகளை மேற்கொள்ள மூன்று பாரந்தூக்கிகளை கொள்வனவு செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. பெறுகைகள் நடைமுறையை | இந்த 03 கொள்கலன் பாரந்தூக்கிகளை கிழக்கு கொள்கலன் தளத்தில் (ECT) பொருத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அது அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டிருந்தது. 2020 யூலை 03 ஆந் | அரசின் கொள்கை ரீதியான தீர்மானத்தினால் ஏற்பட்டுள்ள இந்த செலவினத்தை குறைத்துக்கொள்ள உரிய தரப்பினருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பின்பற்றி பாரந்தூக்கிகளை கொள்வனவு செய்வதற்காக வழங்குநர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், பின்னர் 2020 பெப்ரவரி 07 ஆந் திகதிய PA/HD/25 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம், இந்த மூன்று பாரந்தூக்கிகளும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் கிழக்கு கொள்கலன் தளத்தில் (ECT) பொருத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. குறித்த பாரந்தூக்கிகள் மூன்றினை கொண்டு வந்த கப்பல் 2020 யூன் 20 ஆந் திகதி கொழும்பு துறைமுகத்திற்கு வந்திருந்ததுடன், பாரந்தூக்கிகள் மூன்றினை கிழக்கு கொள்கலன் தளத்தில் இறக்குதல் தொடர்பில் நிலவிய முரண்பாடடான நிலை காரணமாக குறித்த தரையிறக்கல் பணிகள் 2020 யூலை 03 ஆந் திகதி வரையிலும் தாமதிக்கப்பட்டிருந்தது. வழங்குநர் கம்பனியினால் 2020 யூன் 26 ந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தின் மூலம் 2020 யூன் 23 ஆந் திகதி முதல் நாளொன்றிற்கு ஐ.அ.டொலர் 60,000 படி 11 நாட்களுக்கு ஐ.அ.டொலர் 660,000 குறித்த வழங்குநரால் அதிகாரசபையிடம் கோரப்பட்டிருந்த போதிலும், அந்த தாமதக் கட்டணத்தினை செலுத்துதல் தொடர்பில் 2020 யூலை 31 ஆந் திகதிய வரையிலும் இணக்கப்பாடொன்று எட்டப்பட்டிருக்கவில்லை. | திகதிய இந்த பாரந்தூக்கிகளை கிழக்கு கொள்கலன் தளத்தில் (ECT) தரையிறக்கப்பட்டதுடன், கட்டணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. | |
| (இ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அதிகாரசபையின் இயந்திரப் பொறியியலாளர் பிரிவிற்குரிய செயற்பாட்டு | ஜயா கன்டெய்னர் டேர்மினல் (JCT) இல் தற்போது உள்ள மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியின் அடிப்படையில் | செயற்பாட்டு பணிகளை தாமதமின்றி மேற்கொள்வதற்காக பிரைம்மூவர் வாகனங்களை உரிய |

| | | |
|---|---|---|
| பிரிவுகளுக்குரியதாக பயன்படுத்தப்படும் 138 பிரைம்மூவர் வாகனங்கள் காணப்பட்டதுடன், அந்த பிரைம்மூவர் வாகனங்கள் மூலம் நாளொன்றிற்கு 20-30 இற்கு இடைப்பட்ட எண்ணிக்கையிலான பழுதுபார்த்தல்கள் இடம்பெறுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எனினும் பிரைம்மூவர் பழுதுபார்த்தல் பிரிவின் ஒரு தடைவ பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்வதற்காக 06 வாகனங்களுக்கான இடவசதி மாத்திரம் காணப்படுகின்றது. இதன் காரணமாக பிரைம்மூவர் வாகனங்களின் பழுதுபார்த்தல் பணிகள் தாமதமடைவதற்கு சந்தரப்பம் நிலவுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | அந்த பிரிவினை விஸ்தரிப்பதற்கு இடமொதுக்குதல் கடினமானது ஆகும். துறைமுகங்கள் அதிகாரசபையின் திட்டத்தின் பிரகாரம், கிழக்கு கொள்கலன் தளத்தில் (ECT) செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கிழக்கு கொள்கலன் தளம் (ECT) மற்றும் ஜயா கன்டெய்னர் டேர்மினல் (JCT) இணைந்து துறைமுக அதிகாரசபையின் பணிகளை முன்னெடுக்க உள்ளன. அதன் பிரகாரம் கொள்கலன் செயற்படுத்தல் இரு கொள்கலன் தளங்களிடையே பகிர்ந்து சென்ற பின்னர் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த ஜயா கன்டெய்னர் டேர்மினலை மேம்படுத்தும் திட்டம் அந்த பிரிவினையும் விஸ்தரிக்க திட்டமிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ஜயா கன்டெய்னர் டேர்மினலின் மீளமைக்கும் செயற்திட்டத்தின் கீழ் இந்த பிரிவினை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலத்தில் பழுதுபார்ப்பதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபைக்குச் சொந்தமான கொழும்பு துறைமுகத்தில் உள்ள 6,400 மொத்த தொன் கொள்ளளவு கொண்ட பழைய எண்ணெய் தாங்கிகள் 10 எண்ணிக்கையானவை 2015 ஆம் ஆண்டு முதல் குறை பயன்பாட்டில் காணப்படுகின்றது. | 6,400 மொத்த தொன் கொள்ளளவு கொண்ட இந்த எண்ணெய் தாங்கிகள் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு அமைச்சின் விலைக்கேள்வி சபையின் மூலம் விலைக்கேள்வி கோரப்பட்டு குத்தகையாளர் ஒருவர் தீர்மானிக்கப்பட்டுள்ளார். மேலும், அந்த குத்தகை வருமானம் மற்றும் நாளாந்த அடிப்படையில் (TARIFF) பெறக்கூடிய வருமானம் ஒப்பிடப்படுவதுடன், அதன் பின்னர் அது அந்த குத்தகையாளருக்கு வழங்க தீர்மானிக்கப்படும். | எண்ணெய் தாங்கித் தொகுதியை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பிரதி தலைமை முகாமையாளர் (வளாகம்) இன் 1/1/156 ஆம் இலக்க மற்றும் 2020 யூலை 13 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இலங்கை முறைமுக அதிகாரசபைக்குரிய கொழும்பு துறைமுகத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலுள்ள காணிகளிடையே ரூபா 2,284.42 மில்லியன் பெறுமதியான 36 ஏக்கர் 2 ரூட் 26.43 பேர்ச் பரப்பளவான காணி குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | இணங்குகின்றேன்.<br><br>குறைப்பயன்பாடுடையது என குறிப்பிடப்பட்டுள்ள இந்த 36 ஏக்கர் 2 ரூட் 26.43 பேர்ச் பரப்பளவான காணி மஹர கல்வல வளாகம், டீ.ஆர். விஜேவர்த்தன மாவத்தயில் மற்றும் போரே குளத்தின் இருபுறமும் உள்ள துறைமுக அதிகாரசபைக்குரிய காணியாகும்.<br><br>டீ.ஆர். விஜேவர்த்தன மாவத்தயில் மற்றும் போரே குளத்தின் இருபுறமும் உள்ள காணி நீண்ட கால குத்தகைக்கு வழங்கும் நொக்கில் பத்திரிக்கை அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டு விலைக்கேள்வி கோரப்பட்டுள்ளது. இந்த காணி கொழும்பு நகரின் மத்தியில் அமைந்துள்ள பெறுமதியான காணி என்பதால் அவை அரசின் நகர திட்டத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி அமைச்சின் அங்கீகாரம் மற்றும் அதன் அளவுக்கட்டளைகளின் பிரகாரம் துறைமுகங்கள் அதிகாரசபைக்கு குத்தகைக்கு வழங்க நேர்ந்துள்ளது. அதனால், அரசின் அபிவிருத்தி திட்டத்திற்கு இணங்கவும் இணக்கப்பாட்டின் அடிப்படையிலும் இந்த காணி தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொருளாதார வகையின் நலன் கிடைக்கும் வகையில் அந்த காணியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன பணிகளிலான தாமதங்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அதிகாரசபையினால் 2017 திசெம்பர் 09 ஆந் திகதி முதல் 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி வரையிலும் 02 வள்ளங்களும், 2018 ஒக்தோபர் 05 முதல் 3 வருடங்கள் வரையிலும் 03 டக் படகுகளும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 09 ஆந் திகதி முதல் 2020 மார்ச் 28 | துறைமுகங்கள் அதிகாரசபையினால் வாடகை அடிப்படையில் டக் படகுகள் பெற்றுக்கொள்ளப்பட்டு, அந்த படகுகளுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 03 டக் வள்ளங்களுக்காக எஞ்சிய காலப்பகுதிக்காகவும் (2020.10.25 ஆந் திகதி வரை) கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கொழும்பு துறைமுகம் போன்ற வணிக ரீதியான துறைமுகமொன்றில் தமக்கு சொந்தமான டக் படகள் சில காணப்படுவதன் மூலம் செயற்பாட்டு பணிகளை தடையின்றி மேற்கொள்ள முக்கியமானது ஆகும். |

| | | |
|---|---|---|
| ஆந் திகதி வரையிலும் டக் படகுகளும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ள ஐ.அ.டொலர் 9,573,886 (ரூபா 1,542.18 மில்லியன்) அதிகாரசபையினால் செலவிடப்பட்ருந்தது. அதிகாரசபையின் தலைவரால் வரைபு கணக்காய்வு அறிக்கைக்காக வழங்கப்பட்டிருந்த பதிலின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையின் மூலதன பாதீட்டின் மூலம் டக் படகுகள் இரண்டு கொள்வனவு செய்வதற்காக ரூபா 4,500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததாகவும், ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக அந்த நிதியேற்பாடு நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | டக் வள்ளய்வளை கொள்வனவு செய்தல், அவற்றை பராமரித்தல், ஊழியர் சம்பளம் ஆகியவற்றுக்காக செலவிடப்படும் பணத்திற்கு ஒப்பாக டக் வள்ளங்களை வாடகைக்கு எடுத்தல் மிக்வும் இலாபமான போதிலும், துறைமுகமொன்றின் செயற்பாட்டு பணிகளை வாடகைக்கு பெற்ற வள்ளங்களின் மூலம் நிறைவேற்றுதல் பொருத்தமற்றது என்பதால் டக் வள்ளங்களை கொள்வனவு செய்வதற்காக கவனம்செலுத்தி அதற்காக நிதியேற்பாடு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 செப்தம்பர் 03 ஆந் திகதி முதல் வெற்றிடமாக காணப்படும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் (மனிதவளம் மற்றும் அபிவிருத்தி) பதவிக்காக பொருத்தமான நபரொருவரை இணைத்துக்கொள்ள அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன்.<br><br>எதிர்காலத்தில் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். | மனிதவள முகாமைத்துவம் மிகவும் முக்கியமான பிரிவொன்று என்பதால் துரிதமாக வெற்றிடத்தினை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |